இயக்குநர்
கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்
04 AUG 2023

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. ஏ. மதிவெங்கடேசன், த/பெ (லேட்) திரு. அ. ஏகாம்பரம் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது ஆடி மாதம் 15–ம் நாள்

அரசாணை (டி) எண். 496 நாள் 31.07.2023

035215

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண்.99836/ ஆர்3/2015, நாள் 24.08.2022.

------

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மண்டலம், ஆரணி (கால்நடை பராமரிப்பு) உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள ஆரணி, நடமாடும் கால்நடை மருந்தகத்தில் கால்நடை ஆய்வாளர் நிலை–2 ஆக பணியிலிருக்கும்போது 19.02.2004 அன்று மறைந்த திரு. அ. ஏகாம்பரம் என்பவரது வாரிசுதாரரான திரு. ஏ. மதிவெங்கடேசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலூர் மண்டலம், திருப்பத்தூர் (கால்நடை பராமரிப்பு) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 07.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)–ற்கு விதிவிலக்கு அளித்து, தனியர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 07.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. ஏ. மதிவெங்கடேசன், இளநிலை உதவியாளரின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 07.02.2020 அன்று குறும வயது பூர்த்தி செய்துள்ள போதிலும், அவர் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்த நாளில் 19.12.2007 அன்று குறும வயது தகுதியினை பூர்த்தி செய்யாததால், அரசாணை

Scanned with CamScanner

(நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020க்கு விலக்களித்தும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b) மற்றும் தனியருக்கு பணப்பலன்கள் நியமன நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) ஆகிய விதிகளை தளர்வு செய்து, தனியர் பணியில் சேர்ந்த நாளான 07.02.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற தனியர், விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.5102/க்யூ–1/2023–1, நாள் 17.07.2023ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35
இளநிலை உதவியாளர்
திரு. ஏ. மதிவெங்கடேசன், இளநிலை உதவியாளர்
வேலூர் மண்டலம், திருப்பத்தூர் (கால்நடை பராமரிப்பு) உதவி இயக்குநர்
அலுவலகம், (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும்
மருத்துவப் பணிகள், சென்னை–35 வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்
தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம்–மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்
துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு.
பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உபரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(சோ. மீனலோச்சனி)
அரசு சார்புச் செயலாளர்

Scanned with CamScanner